*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கிராமப்புறங்களிலே வாழ்கின்ற நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும், கைவினைஞர்கள் அத்தனை பேருக்கும் இது பொருந்தும் என்று அறிவித்து விட்டால் சரியாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம் அங்கெல்லாம் மாத வருமானம் ரூ. 500 அதற்குக் கீழுள்ளவர்களுக்கும் மட்டும்தான் பொது விநியோக திட்டத்தின் கீழ் குறைந்த விலை அரிசி வழங்கப்படுகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரை அதை இன்னும் உயர்த்தி மாத வருமானம் ரூ. 750-ம் அதற்குக் கீழ் உள்ளவர்களுக்கும் இந்த குறைந்த விலை அரிசி வழங்கப்படும் என்று நிர்ணயித்து விட்டோம். இது எல்லோருக்கும் பொருந்தும். யாரெல்லாம் ரூ. 750 மாத வருமானம் பெறுகிறார்களோ, அதற்குக் கீழ் பெறுகிறார்களோ அவர்களுக்கு மட்டும் தான் இனி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குறைந்த விலையில் அரிசி வழங்கப்படும்.

4. அறிவிப்பு.

1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளித்தல் குறித்து. (ஆ. செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள் புதன்கிழமையைக் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

(அ) வால்பாறை வட்டத்தில் அரசுக்குச் சொந்தமான ஆணைமலை இளப் இடத்தை கையகப்படுத்தாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. டாக்டர் அ. ஸ்ரீதரன் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் அ. ஸ்ரீதரன்.